

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, அத்திவாக்கம் ஒன்றியம், ஒரத்தி கிராமத்தில், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ.வேலு வீடு, வீடாக சென்று, துண்டுப் பிரசுரங்கள் வழங்கி, தி.மு.கழக அரசின் சாதனைகளைக் கூறி திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு, உதயசூரியன் சின்னத்தில் வாக்குசேகரித்தார். உடன் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ந.சீனுவாசன், காலேஜ் ரவி, இல.குணசேகரன், அ.திவாகர் மற்றும் தொகுதி பொதுமக்கள் பலர் உள்ளனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, SDPI கட்சி சார்பில் நடைபெற்ற நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றி ஆலோசனைகளை வழங்கினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, SDPI கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கரீம், மாவட்டத் தலைவர் ஜிபைர்அலி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் தலைமை! தா.மோ.அன்பரசன் முன்னிலை! இ.பரந்தாமனுக்கு

மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் கி.வீரமணி வாக்கு சேகரிக்கிறார்!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் சேலம் ஆர்.ராஜேந்திரன் - பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கூட்டறிக்கை!

மதுராந்தகம்,அக்.1

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வையாவூர் ஊராட்சியில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில், 01.10.2026 வியாழக்கிழமை மாலை சரியாக 6.00 மணியளவில், வையாவூர் - மூசிவாக்கம் பேட்டையில் நடைபெறும் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் உரையாற்றி வாக்கு சேகரிக்கிறார்.

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில்,

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில், சேலம் மத்திய மாவட்டம் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நெல்வாய்,மங்கலம், கள்ளபிரான்புரம்,ஜானகிபுரம்,வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, குன்னங்குளத்தூர், வீராலூர்,நல்லூர்,பெரிய வெண்மணி ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 1,2,3,4, 7, 9, 33, 34, 35, 36, 37, 38, 57, 58,68,69,71, 72,73,281, 282,283 ஆகிய பாகங்களில் பணியாற்றும் சேலம் மத்திய மாவட்டம் மற்றும் சென்னை கிழக்கு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் பொறுப்பாளர்கள், அப்பாகங்களின் உள்ளூர் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் சேலம் ஆர். ராஜேந்திரன் - பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

பழமத்தூர் ஊராட்சியில் இ.பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம்!

சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் வாக்கு சேகரித்தார்!

மதுராந்தகம், அக்.1-

பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் நேற்று வீடு வீடாக சென்று கழக வெற்றி வேட்பாளர் ஐ. பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



இந்நிகழ்வில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளர் திரு. எம்.கிருஷ்ணமூர்த்தி, களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், வட்ட செயலாளர்கள் எல். ஆரோக்கியராஜ்., எஸ். பி.கோதண்டம், சைதை ஆ. வரதன், தா.மோகன்குமார், மு.பாக்கியலட்சுமி, சைதை ஆர்.ரமேஷ், மணிகண்டன் நாடிமுத்து, சைதை ஏ.மஜித், இரா.சுதாபிரியன், வே.கோதண்டம், இரா.தமிழ்வாணன், துரை சரவணன், சோ.முருகையன், மு.சாந்தி, ஆ.விக்டர், வி.என்.செல்வமணி, சூரியன் பிரபு, பா.செல்லபாண்டியன், கேபிள் சம்பத், ஏ.எஸ்.ரியாஸ் அகமது, எல். கார்த்திக், வீடியோ எழில், ஈ.மதன சேகரன், ஏ.சுப்பிரமணி, எஸ்.கரிமுல்லா, கி.சிவப்பிரகாஷ், ராஜா சம்பத், சசிகுமார், தமிழரசன், சரத், உமாநாத், மேகநாதன், தவமணி, பா.அருண், எம்.அருண்குமார், சிவப்பிரசாத், சவரிமுத்து, க.ரஞ்சித், மைதிலி, இள.அரவிந்தன், அ. ரிஷிகுமார், அ.பிரேம்குமார், பர்வி நவாஸ், செல்வதுரை, வி.வீரா உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உடனிருந்தனர்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாமண்டூரில் அமைக்கப்பட்டுள்ள பணிமனையில் மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் ஆலோசனை மேற்கொண்டனர். உடன் கழக துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம்கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அரசு ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து கிராமப் பெண்கள் சபைக் கூட்டம்!

மேயர் பிரியா ராஜன் – இளம் பேச்சாளர்கள் பங்கேற்பு!

மதுராந்தகம்,அக்.1-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கோரி கிராமப் பெண்கள் சபைக் கூட்டங்கள் வையாவூர், மலை வையாவூர், சூரை உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்றன.



இக்கூட்டங்களில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், இளம் பேச்சாளர்கள் ஜோதி, ரோஜா, ஷர்மிளா, வனிதா, கீர்த்தனா உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர் பாபு பேசுகையில், "வருகிற 6ஆம் தேதி நடைபெறும் தேர்தல் வெறும் தேர்தல் அல்ல; வெறுப்பிற்கும் பண்பிற்கும், அதிகாரத்திற்கும் அன்பிற்கும் இடையே நடைபெறும் தேர்தல்" என்றார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதால் மீண்டும் இடைத்தேர்தல் ஏற்படும் நிலை உருவாகக் கூடாது என்று குறிப்பிட்ட அவர், 78 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுடன் பயணித்து, கொள்கையில் உறுதியாக நிற்கும் இயக்கம் தி.மு.க. என்று கூறி, வேட்பாளர் இ. பரந்தாமனுக்கு ஆதரவு கோரினார்.

மேயர் பிரியா ராஜன் பேசுகையில், முந்தைய சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் வேறு கட்சிக்குச் சென்றதாலேயே இந்த இடைத்தேர்தல் ஏற்பட்டதாகக் குற்றம்சாட்டினார். தொகுதியில் பேருந்து நிறுத்தம், நியாயவிலைக் கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்னும் தேவைப்படுவதாக மக்கள் தெரிவிப்பதாகவும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி இத்தகைய தேவைகளை நிறைவேற்றியிருக்கலாம் என்றும் கூறினார். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதும் அரசின் முக்கியக் கடமை என்று வலியுறுத்தினார்.

இளம் பேச்சாளர் ரோஜா, விலைவாசி உயர்வை பாடல் மூலம் விமர்சித்ததுடன், ஒரு கட்சியின் சார்பில் வெற்றி பெற்று பின்னர் வேறு கட்சிக்குச் சென்று மீண்டும் வாக்குக் கேட்பது குறித்து வாக்காளர்கள் சிந்திக்க வேண்டும் என்றார். குழந்தைகள் மற்றும் குடும்பங்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இளம் பேச்சாளர் ஜோதி, மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பெண்களுக்கான திட்டங்களை எடுத்துரைத்தார். சாலை, குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், ஒரு குடும்பத்திற்கு வரனைத் தேர்வு செய்யும் போது எப்படி விசாரித்து முடிவு செய்கிறோமோ, அதேபோல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துபவரின் தகுதி மற்றும் செயல்பாடுகளையும் ஆராய்ந்து வாக்களிக்க வேண்டும் என்றார்.

இளம் பேச்சாளர் ஷர்மிளா பேசுகையில், பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக திராவிட இயக்கம் தொடர்ந்து குரல் கொடுத்துள்ளதாகக் கூறினார். சாலை, குடிநீர், பேருந்து உள்ளிட்ட தொகுதியின் அடிப்படைத் தேவைகளைச் சட்டமன்றத்தில் எடுத்துரைத்து, அவற்றைப் பெற்றுத்தரும் பிரதிநிதி தேவை என்றும் வலியுறுத்தினார்.

இறுதியாக, அக்டோபர் 6ஆம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலில் வாக்காளர்கள் கடந்தகாலப் பணிகள், நிறைவேற்றப்படாத தேவைகள் மற்றும் வேட்பாளர்களின் செயல்பாடுகளை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இ. பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு அளிக்குமாறும் பிரச்சாரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ப. தாயகம் கவி, கழக கொள்கைபரப்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, ஒன்றியச் செயலாளர் சத்திய சாய் நாதன், பகுதி செயலாளர்கள் செ. தமிழ்வேந்தன், எம் சாமிகண்ணு, பெரம்பூர் ஆர். ராஜன், எம்.டி.ஆர். நாகராஜ், எஸ். ராஜசேகர், நா. ரஞ்சித் விஜயாலயன், இரா. வீரமணி, 34, 35, 36 ஆம் பாகப் பொறுப்பாளர்கள் சி. சுந்தரவரதன், பிரதாப், மதன் பால், நாகராஜன், நாகப்பன், தியாகராஜன், நாராயணன், பாலாஜி, தேனி, வினோத், தனிகாசலம், ரமேஷ், வேம்புலி, மணிகண்டன், சுரேஷ், பத்தன் அருள்ராஜ், டி.ஜி.எம். பெருமாள், பி. தாண்டவராயன், பி. பார்த்திபன், சத்தியராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் நகரம் 22 வது வார்டில் காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.இன்சாமாம் மதுராந்தகம் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் தேவபிரகாஷ் இளம் பேச்சாளர் பூபதி வட்ட இளைஞரணி அமைப்பாளர் பொன்னுமணி 127 வது பாக இளைஞரணி அமைப்பாளர் மணிமாறன் பல்லாவரம் வடக்கு பகுதி கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கோ.முத்துகிருஷ்ணன்,ஜிவி.விஜயகுமார் ரா.ஹரி,கோ.கார்த்தி,ச.மகேஷ்குமார்ஆகியோர் வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி உதய சூரியனுக்கு வாக்களித்து கழக வேட்பாளரை வெற்றி பெற செய்யுமாறு ஆதரவு திரட்டினார்கள் மதுராந்தக நகர இளைஞர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்